# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

## முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~
~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~ தி.DSP
Under Section 173 BNSS

C 8102142

1. District : மாவட்டம் திண்டுக்கல் PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு Year: ஆண்டு 2024 FIR No.: மு.த.அ. எண் 9/2024 Date: நாள் 18.12.24.

2. (i) Act சட்டம்: The Prevention of corruption Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: Act 1988 as amended Sections பிரிவுகள்: 7(a)
(iii) Act சட்டம்: in 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 08.02.2024ம் தேதிமுதல் மார்ச் -2024 வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 14.12.2024 Time நேரம் : 17.00hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 18.12.2024 Time நேரம் : 16.30hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் HP Petrol Bunk, சிறுவத்தூர் சாலை, பாலகிருஷ்ணாபுரம், திண்டுக்கல்.
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் சுமார் 10.கி.மீ தென் கிழக்கு.

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திருமதி. K. விஜயலட்சுமி (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் P. கருப்பையா
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 60/24 (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் துபாய் கருப்பையா பாரத் எண்டர் மற்றும் பெட்ரோல் பங்க் உரிமையாளர் (g) Address : முகவரி HP பெட்ரோல் பங்க் அருகில் சிறுவத்தூர் ரோடு, பாலகிருஷ்ணாபுரம் போஸ்ட், திண்டுக்கல்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) திரு.S. சந்திரமோகன், காவல் ஆய்வாளர், திண்டுக்கல் தாலுகா காவல் நிலையம்
2) திரு.R. அழகர்சாமி, சார்பு ஆய்வாளர், திண்டுக்கல் தாலுகா காவல் நிலையம்
3) திரு. வினோத், காவலர், திண்டுக்கல் தாலுகா காவல் நிலையம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

GCP 240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS.................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 18/12/24 [signature] 18/12/24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
18.12.2024 at 18.00hrs.

Name: பெயர் ஜெ. நாகராஜன்,
Rank: நிலை ....................No. எண் ..........
காவல் துணை கண்காணிப்பாளர்,
உ.த.க. பிரிவு, திண்டுக்கல்.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)p 2

**திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்:9/2024 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-**

## Column No.12, FIR Contents

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:** திண்டுக்கல், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் துணைக்கண்காணிப்பாளர் ஆகிய நான் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளையின் Crl. OP (MD) No. 8800/2024 என்ற மனுவில் 22.11.2024ம் அன்று பிறப்பிக்கட்ட உத்தரவின் பேரிலும், கடந்த 10.12.2024ம் தேதியிட்ட இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை அவர்களின் குறிப்பாணை Petn.No.15724/2024/POL/DLன்படி புகார்தாரர் திருமதி.K.விஜயலெட்சுமி (60/2024), க/பெ.P.கருப்பையா, HP பெட்ரோல் பங்க் அருகில், சிலுவத்தூர் ரோடு, பாலகிருஷ்ணாபுரம் போஸ்ட், திண்டுக்கல்-624005 என்பவருக்கு 11.12.2024ம் தேதி தகவல் தெரிவித்ததின் பேரில் 14.12.2024ம் தேதி மாலை 17.00 மணிக்கு நிலையத்தில் ஆஜராகி கொடுத்த கணிணிமூலம் தயார் செய்யப்பட்ட புகாரை பெற்று இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை அவர்களின் ஒப்புதலுக்கு அனுப்பி வைத்து பின்னர் வழங்கப்பட்ட ஒப்புதல் குறிப்பாணை Petn.No.15724/2024/POL/DL, நாள்.18.12.2024ன் படியும், காலம் 7ல் கண்ட பொது ஊழியர்களான எதிரிகள் மீது குற்ற எண்.9/2024 ஊழல் தடுப்பு திருத்தச் சட்டம் 2018 சட்டப்பிரிவு 7(a)ன்படி இன்று 18.12.2024ம் தேதி மாலை 16.30 மணிக்கு கீழ்கண்ட குற்றச்சாட்டுகள் தொடர்பாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு:

அனுப்புனர். Mrs.K.விஜயலெட்சுமி, (60/2024), க/பெ.P.கருப்பையா, HP பெட்ரோல் பங்க் அருகில், சிலுவத்தூர் ரோடு, பாலகிருஷ்ணாபுரம் போஸ்ட், திண்டுக்கல் -624005. பெறுநர். உயர்திரு.காவல்துறை துணை கண்காணிப்பாளர் அவர்கள்,ஊழல் மற்றும் லஞ்ச ஒழிப்புத்துறை, 576/4, திருவள்ளுவர் வளாகம், E.B.காலனி, செட்டிநாயக்கன்பட்டி, திண்டுக்கல்-624004, திண்டுக்கல் மாவட்டம், ஐயா, பொருள்:உயர்நீதிமன்ற மதுரை கிளையின் 22/11/2024ம் தேதியிட்ட உத்திரவாக நான் தாக்கல் செய்திருந்த புலன் விசாரணை மாற்றக்கோரும் மனுவான CRL.O.P.(MD).No.8800/2024-ல் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதலின் படி நடவடிக்கை எடுக்கக்கோரி பணிவுடன் சமர்ப்பிக்கும் மனு. நானும், என் கணவர் P.கருப்பையா அவர்களும் எங்கள் ஒரே மகன் P.K.பாரத் மேலே கண்ட முகவரியில்

நிலையாக குடியிருந்து வசித்து வருகிறோம். நான் அஞ்சல்துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது ஓய்வூதியம் பெற்று வருகிறேன். என் கணவர் Mechanical Engineering துறையில் Diploma மற்றும் Diploma in Desalination Technology-ல் பயிற்சி பெற்று சவுதி அரேபியா, சூடான், லிபியா மற்றும் ஐக்கிய அரபு நாடுகளில் சுமார் 35 வருடங்களாக பணிபுரிந்து தற்பொழுது இந்தியாவில் இருக்கிறார்.

இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்ரேட் நிறுவனத்தில் என் பெயருக்கு முகவர்/டீலர் அனுமதி பெற்று எங்களுக்கு சொந்தமாக என் கணவர் வாங்கிய இடத்தில் "துபாய் கருப்பையா-பாரத் எண்டர்பிரஸ்சஸ்" பெட்ரோல் பங்கை நிறுவி அந்த நிறுவனத்தை மேலாண்மை செய்து வருகிறேன். எங்கள் மகன் பாரத் திண்டுக்கல்லில் உள்ள PSNA பொறியியல் கல்லூரியில் Mechanical Engineering-ல் B.E., பட்டமும் (2016 - 2020) பின்பு Hospital Management துறையில் MBA பட்டமும் பெற்று தற்போது பல நிறுவனங்களில் பயிற்சி பெற்றும் ஓய்வு நேரங்களில் எங்கள் பெட்ரோல் பங்கை மேலாண்மை செய்தும் வருகிறார். என் கணவர் வெளிநாடுகளில் பணிபுரியும் போது ஒவ்வொரு முறையும் வெளிநாட்டில் இருந்து இந்தியா வரும்போது புதிய புதிய வடிவமைப்பு கொண்ட தங்க நகைகள் வாங்கி வருவது வழக்கம்.

நானும், எனது வருமானத்தில் உள்ள சேமிப்பு தொகையில் அவ்வப்போது புதிய நகைகள் வாங்கி சேமித்துள்ளேன். என் பெற்றோர்கள் எனக்கு கொடுத்திருந்த நகைகளையும் அழித்து புதிப்பித்துள்ளேன். இவ்வாறாக வீட்டில் 80 சவரனக்கும் மேலாக தங்க நகைகள் எங்கள் வீட்டிலுள்ள பூஜை அறையில் வைத்திருந்த ஸ்டீல் பீரோவில் வைத்து பூட்டியிருந்தோம். தவிர என் மகன் பாரத்திற்கு வரன் பார்த்துக் கொண்டிருந்ததால் தேவைப்படும் என்று எண்ணி ரூபாய் 3 லட்சத்து 50 ஆயிரம் வீட்டில் படுக்கறையில் வைத்திருந்த ஸ்டீல் பீரோவில் வைத்திருந்ததில் அவசர செலவுகளுக்காக எடுத்துக்கொண்ட தொகை போக மீதம் ரூ.3,23,000/-த்தையும் பீரோவில் வைத்திருந்தோம். தவிர 2-ROLEX Watch இரண்டும் சேர்த்து ரூ.7,00,000/- மதிப்பிலானது 21 Jewels வைத்து தயாரிக்கப்பட்ட SEIKO -5, Golden Ladies Watch ரூ.1,00,000/- பெறுமானமுள்ளது ஆகியவையும் வைக்கப்பட்டிருந்தன.

கடந்த 07.02.2024ம் தேதி மாலை சுமார் 5.45 மணி போல நானும் என் கணவரும் உறவினர் வீட்டிற்கு சென்றிருந்தோம். என் மகன் பெட்ரோல் பங்கிலிருந்து நண்பர்களை பார்க்க வெளியே சென்றிருந்தான். வீட்டில் யாரும் இல்லாத நிலையில்

இரவு 9 மணிக்கு திரும்ப வந்து பார்த்த பொழுது வீட்டின் முன் வாயில் கதவு திறந்து கிடந்ததை பார்த்து நானும், என் கணவரும் பதறிப்போய் உள்ளே சென்று பார்த்த பொழுது பூஜை அறையில் இருந்த 2 பீரோக்களும் உடைக்கப்பட்டும், படுக்கையறையிருந்த எனது கணவரின் பீரோவும் உடைக்கப்பட்டு திறந்து கிடந்தன. அவைகளில் நாங்கள் வைத்திருந்த மேற்சொன்ன 80 பவுன் தங்க நகைகளும், வாட்சுகளும், ரொக்க பணம் ரூ.3,23,000/-மும் திருடு போயிருந்தன. அக்கம்பக்கத்தாரிடம் கேட்டு விட்டு உடனடியாக 07/02/2024ம் தேதி இரவில் திண்டுக்கல் தாலுகா காவல்நிலை காவல் ஆய்வாளரிடம் புகார் கொடுக்க சென்றபோது அவர் அன்று இல்லாத காரணத்தினால் சார்பு ஆய்வாளர் திரு.பாலசுப்பிரமணியன் எங்களுடைய புகாரை பெற்றுக் கொண்டார். சிறிது நேரத்தில் மோப்ப நாயுடன் சில அதிகாரிகளும், கைரேகைப் பிரிவிலிருந்து சில அதிகாரிகளும் வந்து வீட்டை சோதனை செய்தனர். திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களின் DIG-யான காவல்துறை துணைத்தலைவர் அவர்களும் நேரில் வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு என்னிடமும், எனது கணவரிடமும் விசாரித்து முதல் தகவல் அறிக்கை பதியச்சொல்லி காவல்நிலைய அதிகாரிகளிடம் வாய்மொழி உத்திரவிடும் வரை வழக்கு பதிவு செய்யாமலும் இவ்வளவு நகைகளை புகாரில் சொல்ல வேண்டாம் என்றும், ரோலக்ஸ் வாட்ச், சீக்கோ வாட்ச் ஆகியவைகளை பட்டியலிருந்து அகற்றி விடும்படி எங்களை வற்புறுத்திக் கொண்டிருந்த காவல் அதிகாரிகள், DIG மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் நேரில் வந்திருந்த பொழுது எங்களிடமிருந்த நகைகள் மற்றும் வாட்சுகளுக்கான பில் மற்றும் பண ரசீதுகளை காட்டிய பிறகு நாங்கள் கொடுத்திருந்த புகாரை அப்படியே பதிந்து குற்ற எண்.வழங்கினார்கள். 08/02/2024ம் தேதியன்று குற்ற எண் வழங்கப்பட்டது.

பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பப்படாமல் விசாரணை என்ற பெயரில் எங்களை அலைக்கழித்ததோடு எங்களுக்கு சொந்தமான பெட்ரோல் பங்கிலிருந்து பாரபட்சமின்றி சாதாரண காவலர் முதல் ஆய்வாளர் வரை வேண்டும் போதெல்லாம் தங்கள் இருசக்கர வாகனம், அரசு ஜீப் வாகனம், ஆய்வாளர் திரு.சந்திரமோகனுக்கு சொந்தமான மாருதி எர்டிகா (TN57AJ6171 White Ertiga Vdi BS4) வாகனம் ஆகியவற்றிற்கு பணம் தராமல் பெட்ரோல் அல்லது டீசல் நிரப்பிக் கொள்வது, அத்துடன் அவ்வப்போது திருட்டு சம்மந்தப்பட்ட துப்பு

கிடைத்துள்ளதாகவும், குற்றவாளிகளை தேடிச் செல்ல வாகனம் ஏற்பாடு செய்ய பணம் வேண்டும் என்று இரவு பகல் என்ற வித்தியாசம் பாராமல் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் சொந்த வாகனத்திலோ, அரசு வாகனத்திலோ பெட்ரோல் பங்கிற்கு வந்து பணம் பெற்றுச் செல்வதை வாடிக்கையாக கொண்டனர். எங்கள் பெட்ரோல் பங்க் நிறுவனத்தில் சி.சி.டி.வி கேமரா பொறுத்தியிருந்ததைப் பற்றி அவர்கள் கவலைப்படவேயில்லை. அவர்கள் வந்து பணம் பெற்றுக்கொண்டு சென்ற அனைத்து நிகழ்வும் சி.சி.டி.வி கேமராவில் பதிவாகியிருந்தது.

12/02/2024ம் தேதியன்று இரவு சுமார் 11.40 மணி அளவில் பெட்ரோல் பங்க் முன்பு பொலீரோ ஜீப்பில் திண்டுக்கல் தாலுகா காவல் நிலைய ஆய்வாளர் திரு.சந்திரமோகன் முன் சீட்டில் அமர்ந்துக்கொண்டபடி வந்தார். சார்பு ஆய்வாளர் திரு.அழகர்சாமியும் மற்றும் 2 காவலர்களும் பின் சீட்டில் இருந்து இறங்கிய பின்பு திரு.சந்திரமோகன் அவர்கள் சார்பு ஆய்வாளர் திரு.அழகர்சாமிக்கும் மற்றும் 2 காவலருக்கும் Instruction கொடுத்து விட்டு திரும்பி சென்றுவிட்டார். சார்பு ஆய்வாளர் திரு.அழகர்சாமி அவர்கள் என்னுடைய மகன் பாரத்திடமிருந்து பணத்தை பெற்றுக்கொண்டு மற்ற இரண்டு காவலர்களுடன் இருசக்கர வாகனத்தில் திரும்ப சென்றுவிட்டார். 13/02/2024ம் தேதியன்று இரவு சுமார் 12.00 மணியளவில் மாருதி வெள்ளை நிறமுள்ள (TN57AJ6171 White Ertiga Vdi BS4) காரை எடுத்து வந்து எங்களுடைய பெட்ரோல்பங்கில் ஆய்வாளர் திரு.சந்திரமோகனின் ஓட்டுனர் (காவலர்) திரு.வினோத் என்பவர் பணம் கொடுக்காமல் எரிபொருள் நிரப்பிவிட்டு சென்றுவிட்டார்.

19/02/2024ம் தேதியன்று சார்பு ஆய்வாளர் திரு.அழகர்சாமி அவர்கள் பெட்ரோல் பங்கில் உள்ள அலுலகத்திற்குள் நுழைந்து பெட்ரோல் பங்கிற்கு சொந்தமான தரை தொலைபேசி எண்.0451-2911652 மூலமாக என் மகன் பாரத்தின் நம்பருக்கு தொலைபேசி மூலமாக ரூபாய் கேட்டதால் என்னுடைய மகன் எங்களுடைய பெண் ஊழியர் திருமதி.செல்வி என்பவரிடம் என் மகன் ரூபாய் கொடுக்கச்சொன்னதால் எங்களுடைய ஊழியர் சார்பு ஆய்வாளர் திரு.அழகர்சாமி அவர்களுக்கு ரூபாய் கொடுத்ததையும், அவர் பெற்றுக்கொண்டதையும் எங்களுடைய சி.சி.டி.வி கேமராவில் பதிவாகியுள்ளது. இதனையும் நான் மதுரை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தேன்.

எங்கள் வீட்டில் திருடிய அதே நபர்கள் தாங்கள் வந்திருந்த 4 சக்கர வாகனம் TN11AZ6537ல் (நீலநிறமுள்ள மாருதி சிப்ட் கலர்) தொடர்ச்சியாக துவாக்குடி காவல்நிலைய எல்லைக்குள் 2 வீடுகளில் திருடியும் அங்கிருந்து கடலூர் மாவட்டத்திலுள்ள பண்ருட்டி வழியாக சென்று கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக காவல்துறையால் வாகனங்கள் சோதனை நடந்து கொண்டிருந்த சமயத்தில் காரை நிறுத்திவிட்டு 4 நபர்கள் அதிலிருந்து இறங்கி தப்பிச்சென்றதில் அந்த வாகனத்திலிருந்து பூட்டுகளை உடைத்து கதவுகளை சேதப்படுத்துகின்ற ஆயுதங்கள் வைத்திருந்தும் வேறு வேறு எண்கள் கொண்ட நம்பர் பிளேட் வைத்திருந்ததும் கண்டு அதில் வேறு நகைகள் போன்ற திருட்டினால் சம்பாரித்து பொருட்கள் உள்ளதை கண்டறிந்து பண்ருட்டி காவல் நிலைய குற்ற எண்.122/2024 எண்ணில் குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 40 மற்றும் 102 ஆகிய பிரிவுகளில் குற்றம் பதியப்பட்டு விசாரணை மேற்கொண்டதில் அதே தினத்தில் அதே செய்முறை அடையாளங்களுடன் தகவல் பெறப்பட்டு துவாக்குடி காவல்நிலையத்தில் குற்ற எண்கள்.35 மற்றும் 36/2024 இ.த.ச.பிரிவு 457 மற்றும் 380 பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டும் வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரியான சுரேஷ் என்ற சூட்டு சுரேஷ் என்ற நபரை 2024 வருடம் மார்ச் மாதம் முதல் வாரத்தில் கைது செய்ததாகவும் ஆய்வாளர் திரு.சந்திரமோகன் எல்லா தொலைக்காட்சிகளிலும் பேட்டியளித்தது எங்களுக்கு தெரிய வந்து நாங்கள் நேரில் காவல்நிலையம் சென்று அவரை கேட்ட போது 25 சவரன் நகை மட்டும் தான் கிடைக்கும். மிச்ச நகைகள் வாட்ச் ஆகியவை கிடைக்காது. கைப்பற்றியுள்ள நகைகளை பார்க்கும்போது உன் வீட்டில் உள்ள நகைகள் எல்லாம் கவரிங் நகைகளைப் போல் தெரிகிறது. மேற்கொண்டு நான் வழக்கை விசாரிக்க வேண்டும் என்றால் பெருந்தொகை கொடுத்தால் தான் நடவடிக்கை எடுப்பேன் என்று என் கணவரிடம் சொல்ல எவ்வளவு தொகைதான் எங்களிடம் வாங்குவதாக உள்ளீர்கள் என்று கடிந்து கொண்டதால் அதன்பின் எங்களிடம் எந்த தகவலும் சொல்லாமல் எங்களை உதாசீனப்படுத்தியும் கைப்பற்றியதாக கூறப்படும் நகைகளை எங்களிடம் காட்டி அடையாளங்களை உறுதி செய்ய மறுத்தும் முறையாக நடவடிக்கை எடுக்காமல் இருந்தபடியால் புலன் விசாரணையை சரிவரச்செய்ய லஞ்சம் கேட்டும் அதிகாரியிடமிருந்து திரும்பப்பெற்று மேற்படி வழக்கின் விசாரணையை CBI வசம் ஒப்படைக்கக்கோரி உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தேன். அந்த மனு

CRL.O.P.(MD)No.8800/2024ல் விசாரணைக்கு வந்தபோது சம்மந்தப்பட்ட காவல்நிலையத்தினர் எங்களது பெட்ரோல் நிலையத்திற்கு வந்து லஞ்சம் பெற்றது குறித்து ஆதாரங்களையும், அதற்கான அபிடவிட்டையும் தாக்கல் செய்யும் உத்தரவிட்டு அதன்படி நான் தாக்கல் செய்த ஆதாரங்களை பரிசீலனை செய்து அறிக்கை தரச்சொல்லி Directorate of Vigilance & Anti Corruption துறைக்கு அனுப்பப்பட்டு அதன் நம்பகத்தன்மை உறுதி செய்யப்பட்ட பிறகு சம்மந்தப்பட்ட ஆய்வாளர் திரு.சந்திரமோகன் மற்றும் சார்பு ஆய்வாளர் திரு.அழகர்சாமி, ஆய்வாளரின் டிரைவர் (காவலர்) திரு.வினோத் மற்றும் சம்மந்தப்பட்டவர்கள் மீது சமர்ப்பிக்கப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

எங்கள் பெட்ரோல் நிலையத்திலுள்ள C.C.T.V கேமரா பதிவுகள் ஒரு வாரத்திற்கு மேல் Storage-ல் வைத்துக்கொள்ள இயலாது என்ற காரணத்தால் நாங்கள் ஆதாரமாக கொடுத்துள்ள சி.சி.டி.வி பதிவுகளைத் தவிர அதற்கு முன்னால் ஏற்பட்ட பதிவுகள் எங்கள் வசத்தில் இல்லை.

பல தவணைகளில் இதுவரை ரொக்கமாக பணம் வாங்கியும் அதுதவிர பலமுறை வாகனங்களுக்கு பெட்ரோல், டீசலுக்கு பணம் கொடுக்காமல் நிரப்பி உள்ளனர். இவர்கள் தொந்தரவு பொறுக்க முடியாமல் புலன் விசாரணை மாறுதல் பெறவேண்டும் என்பதற்காக நீதிமன்றத்தில் காட்டும் எண்ணத்தில் சேமித்த பதிவுகள் மட்டும் கையிலுள்ளது. அதைத்தான் உயர்நீதிமன்றத்தில் கொடுத்துள்ளேன்.

இந்த மனுவுடன் வெளிநாடுகளில் பணிபுரிந்தபோது என் கணவர் நகைகள் விலைக்கு வாங்கியதற்கு பணம் செலுத்திய ரசீதுகள், கடிகாரங்களுக்கான புகைப்படங்கள் மற்றும் கோரண்டி கார்டு ஆகியவைகளின் நகல்களை ஏற்கனவே மதுரை உயர்நீதிமன்றத்தில் ஒப்படைத்து இருக்கிறேன்.

ஆய்வாளர் திரு.சந்திரமோகன் சம்பவத்தில் ஈடுபட்ட நீலநிற ஷிப்ட் காரின் சொந்தக்காரரான சென்னை வாழ் பெண்மணியிடமும் அந்த வாகனத்தின் பதிவறிக்கை மாற்றப்படாமல் இருந்த காரணத்தினால் அவரையும் வழக்கின் ஒரு குற்றவாளியாக சேர்ப்பதாக மிரட்டி பெரிய தொகை பெற்றுக்கொண்டு காரை அவர் வசம் ஒப்படைத்து விட்டார் என்பதையும் தெரிவித்துக்கொண்டேன்.

மேற்படி நீலநிற ஷிப்ட் கார் காவல் நிலைய வாசலில் உள்ள புகைப்படத்தையும் இணைத்துள்ளேன். அந்த வாகனத்தின் பதிவு உரிமையாளரை விசாரித்தால் இது பற்றி மேலும் விபரங்கள் துப்பு துலங்கும்.

காவல்துறையில் பணிபுரிந்து கொண்டு பொது மக்களை திருடர்கள் வசமிருந்து காப்பாற்றுவதைவிட்டு விட்டு திருட்டு சம்பவத்தை காரணமாக வைத்து எங்களை மிரட்டியும், லஞ்சமாக கேட்டு பணம் பறித்தல் மற்றும் காசே கொடுக்காமல் பெட்ரோல், டீசல் நிரப்பிக்கொண்ட அதிகாரிகளின் மீது தகுந்த நடவடிக்கை எடுத்து அவர்களுக்கும் தக்க தண்டணை வழங்க ஏற்பாடு செய்யும்படியும், 07/02/2024ம் தேதியன்று நடந்த சம்பவத்தில் எங்கள் வீட்டிலிருந்து திருடப்பட்ட நகைகளையும், கை கடிகாரங்களையும் ரொக்க பணத்தையும் மீட்டு எங்கள் வசம் திரும்ப கிடைக்க ஏற்பாடு செய்யுமாறு பணிவுடன் வேண்டுகிறேன். இடம்: திண்டுக்கல் நாள்: 14/12/2024, தங்கள் உண்மையுள்ள Sd/-xxxxx (K.விஜயலெட்சுமி), 14/12/2024)

Sir, Received the complaint on 14.12.2024 at 17.00 hrs and obtained approval of the Director, Vigilance and Anti-Corruption, Chennai vide Memo Petn.No.15724/2024/POL/DL, Dated: 18.12.2024. Hence, I am registering a case in Dindigul V&AC Cr.No.09/2024, u/s 7(a) of Prevention of Corruption Act 1988, as amended by the PC (Amendment) Act 2018, on 18.12.2024 at 16.30 hrs and took up investigation. Sd/-xxxxx (J.Nagarajan, Deputy Superintendent of Police, V&AC, Dindigul 18.12.2024)

Original FIR along with the complaint of Tmt.K.Vijayalakshmi, Age.60/24, W/o.Karuppiah, HP Petrol Bunk Nearby, Balakrishnapuram, Dindigul District and order copy passed by Hon'ble Madurai Bench of Madras High Court in Crl. OP (MD) No. 8800/2024, Dated:22.11.2024 are submitted to the Chief Judicial Magistrate/Special Judge, Dindigul and copy of the FIR is submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

18/12/24

(J.Nagarajan)
Dy.Supdt. of Police,
Vigilance & Anti-Corruption,
Dindigul.